முருகப்பெருமான் துணை

**மகான் பீர்முகமது அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.12.2022**, புதன்கிழமை

1. ஞானமாக மக்களிடை பரவி
நம்பிக்கையூட்டி உலகினில்
ஞான ஆட்சி அமைய வேண்டி
ஞானிகளை படைக்கும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சிலைதிங்கள்
வரங்களென முன்னான்கோர்திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் **13** ம் நாள் **28.12.2022**, புதன்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை பீர்முகமது யானும்
அருளுவேன் உலகநலம் பெற
வாசிவென்ற ஞானியர் பெருமக்கள்
வல்லமை தந்து அரங்கனோடிருக்க
4. இருக்கவே கலிவாழ் மக்களுக்கு
எந்தப் பாகுபாடும் பற்றா வண்ணம்
கருத்தாக பிரணவக் குடில் நாடி
கந்தப் பெருமான் ஞான வடிவான
5. ஆனதொரு அரங்கன் திருவடி பற்றி
அறிவிப்பேன் சடாட்சர தீட்சை
ஞானமாக ஏற்றுப் பரவச் செய்து
நம்பிக்கை தரும்படி வழிபாடுதனை செய்து
6. செய்துமே மக்களை மீட்க
செப்பிட அரங்கன் சீடர்கள்
அய்யமற சேவை ஆற்றியே
அரங்கமகான் புகழ்பாடிவர
7. வருகவே வையகம் தன்னில்
வந்தடையும் உலகமாற்றமாக
தரும வழிகளையும் கடைபிடித்து
தரணியில் அன்னதானம் செய்து வர
8. வருகவே எங்கு தருமபலம்
வளர்ந்து மாற்றம் காணும்
தருமமும் வளர பெருகவே
தரணியில் இயற்கையும் நின்று
9. நின்று வளம் சேர்த்தும்
நீர்நில வளமும் கூடி
நன்றான தொழில் தனவளர்ச்சி
ஞானபண்டிதன் ஆசிபலம் கூடி

10. கூடியே ஞானிகள் ஆட்சியாக
குறைவிலா ஞான ஆட்சி
நாடியே உலகமாற்றம் காணும்
ஞானிகள் வெளிப்பாடு பெருகி

11. பெருகியே உலகம் எங்கிலும்
பேராசான் அரங்கன் அவதார நோக்கம்
பெருமைபட வெற்றி காணும்
புகன்றிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–